10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
குரல் 02 | அதிர்வு 24 | வியாழக்கிழமை 24 மே 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18

## 8 பரீட்சைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, மே 24

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலைக் கர்ரணமாக, பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்படவிருந்த 8 பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த மாதம் 24,25, 26,27 மற்றும் ஜூன் மாதம் 2ஆம் திகதி நடத்தப்படவிருந்த 8 பரீட்சைகளே இவ்வாறு பிற்போடப்படுவதாக பரீட்சைகள் திணைக்களப்பதில்ஆணையாளர்நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (அ)




## மின்சாரத்தால் தாக்குண்டு தந்தையும், தனயனும் பலி

### கரவெட்டியில் நேற்றுச் சோகம்

யாழ்ப்பாணம், மே 24

கரவெட்டி, கரணவாய் கிழக்கில் மின்சாரம் தாக்கியதில் தந்தையும் மகனும் உயிரிழந்தனர். அவர்களைப் காப்பாற்றுவதற்கு முயற்சித்த இளைய மகன் கையில் காயமடைந்த நிலையில் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

கரவெட்டி, கரணவாய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மயில்வாகனம் ஜெகநாதன் (வயது - 50) அவரது மகன் ஜெகநாதன் சஞ்சீவன் (வயது - 29) 06▶



## இடி, மின்னலோடு யாழில் கொட்டு மழை!

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை முதல் பல மணித்தியாலங்களாக மின்னல், இடியுடன் கூடிய கடும் மழை பெய்ததால் மக்களின் இயல்பு நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இதனால் சில இடங்களில் மின்னல், இடி என்பவற்றால் பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

நேற்றைய மின்னல் தாக்கத்தால், கீரிமலை நகுலேஸ்வரம் 06▶

## அங்கஜனுக்கு எதிர்ப்பு!



கொழும்பு, மே 24

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு அங்கஜன் இராமநாதன் நிறுத்தப்பட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரை ஆதரிக்காது என்று கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், பிரதி சபாநாயகர் பதவிக்கு அங்கஜன் இராமநாதனை முன்னிறுத்துவதற்கு, ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவிடம், சிறிலங்கா சுதந்திரக் கட்சி பரிந்துரைத்துள்ளதாக, அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கட்சியின் தலைவர் 06▶

## அனர்த்தப் பலி 11! வடக்கிலும் மழை!!



யாழ்ப்பாணம், மே 24

நாட்டில் தொடரும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை உயிரிழப்புக்கள் 11 ஆக உயர்வடைந்துள்ளது. 14 மாவட்டங்களில் 84,943 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. கடந்த வருடத்தைப் போல இம்முறையும் இயற்கை அனர்த்தத்தால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், மீட்புப் பணிகளைத் துரித கதியில் மேற்கொள்ள 06▶

### தடுப்பு முகாமை பார்க்க
## புதிய ஒப்பந்தம்

கொழும்பு, மே 24

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தோற்றம் பெற்றுள்ள தடுப்பு முகாம்களை பார்வையிடுவது தொடர்பில் புதிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது தொடர்பில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

இதனடிப்படையில் சுய சுதந்திரத்தினை இழந்த நபர்களுக்கு விடிவினை ஏற்படுத்துவதற்கான ஒத்துழைப்புகள் மற்றும் மனிதாபிமான செயற்பாடுகள் தொடர்பில், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்துடன் குறித்த முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பில், வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. (அ)

### துயர்க்குடியான தூத்துக்குடி
## நேற்றும் சூடு; ஒருவர் பலி!

தூத்துக்குடி, மே 24

தமிழகத்தின் தூத்துக்குடியில் நேற்றும் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். தூத்துக்குடியைச் சேர்ந்த காளியப்பன் (வயது-34) என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டின் சுவடுகள் மறைவதற்குள் நேற்றும் துப்பாக்கிச்சூடு நடைபெற்றிருப்பது தமிழகத்தை மேலும் அதிரவைத்துள்ளது.

முதல் நாள் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களின் உடல்களை ஸ்டெர்லைட் ஆலையை மூடும் வரை வாங்க மாட்டோம் என உறவினர்கள் மறுப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களைக் கலைப்பதற்காகவே மருத்துவமனைப் 06▶

## காரை மோதிய ரயில்

யாழ்ப்பாணம், மே 24

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தது யாழ்தேவி ரயில் புங்கன்குளம் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் கடக்க முயன்ற கார் ஒன்றை நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் மோதியது. இதில் கார் பலத்த சேதமடைந்தது. காரின் சாரதியும் காயங்களுக்கு இலக்கானார் என்று கூறப்படுகின்றது. (அ)







## கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்பு

### ஒரே நாளில் 2 இடங்களில்!

கிளிநொச்சி, மே 24

கிளிநொச்சியில் நேற்று இருவேறு இடங்களில், புலிகளால் புதைத்து வைக்கப்பட்டதாக நம்பப்படும் வெடிபொருட்கள் இராணுவத்தால் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் உள்ள முன்னாள் போராளி 06▶



## வெளிநாட்டு முதலீடுகளுக்கு அரசாங்கம் அனுமதி!

கொழும்பு, மே 24

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், ஆயிரத்து 348 மில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் திட்டங்களுக்கு அரசாங்கத்தால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அனைத்துலக வணிக மற்றும் முதலீட்டு அமைச்சர் மலிக் சமரவிக்ரம நேற்றுமுன் தினம் நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு 1.9 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கிடைத்தன. இது நாட்டின் வரலாற்றிலேயே மிக அதிகமாகும். இந்த ஆண்டு 2.5 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே, இந்த ஆண்டில் ஏப்ரல் மாதம்வரை ஆயிரத்து 348 மில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் திட்டங்களுக்கு அரசாங்கத்தால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

"இதேவேளை எதிர்வரும் ஜூன் மாதம் 2.75 பில்லியன் டொலர் முதலீட்டிலான இரண்டு இயற்கை எரிவாயு மின் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்கள் கட்டுமானப்பணிகள் முடிந்து நடைமுறைப்படுத்தப் படுவதற்கு சில ஆண்டுகளாகும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# அடையாளம் இழக்கும் கிழக்கு தமிழர்கள்!

## வியாழேந்திரன் எம்.பி. கவலை

மட்டக்களப்பு, மே 24

கிழக்கு மாகாணத்தில் தமிழ் சமூகம் இருந்தமைக்கான அடையாளம் இல்லாது போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாதியப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் தமிழ் இளைஞர்கள் எவரும் பங்கேற்றகவில்லை. முகப்புத்தகத்தில் படம் போடுவதற்கே அதிக இளைஞர்கள் முன்னிற்கின்றனர். இஸ்லாமிய சமூகம் தனித்துவமாகச் சிந்திக்கின்றது. அந்த தனித்துவம் எங்கள் சமுதாயத்திடம் இல்லை. முஸ்லிம் பகுதியில் மதுபான சாலைகளோ, புத்தர் சிலைகளோ இல்லை.

இளைஞர்கள் விளையாட்டுடன் மட்டும் நின்றுவிடாமல், சமூகத்தில் முற்போக்குச் சிந்தனையுடையவர்களாக செயற்படவேண்டும். கடந்தவாரம் மட்டக்களப்பில் ஹெரோயின் வைத்திருந்த எட்டு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பில் பல்வேறு போதைப்பொருட்கள் பாவனைக்கு வருவதனால் இளைஞர்கள் ஆரோக்கியமற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அநேகமான



இளைஞர்கள் சமூக வலைத்தளங்களில் தமது நேரத்தைச் செலவிடுகின்றனர். மனிதன் மனிதனோடு பேசும் நிலைமை மாறி, மனிதன் இயந்திரங்களோடு பேசி இயந்திரங்களாகவே மாறும் நிலை உருவாகி வருகின்றது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஆட்சிக்கு வந்தால் 10 இலட்சம் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவோம் எனத் தெரிவித்தார். இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பை வழங்குவதற்கான எந்தத் திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் உள்ள பழம்பெரும் தொழிற்சாலைகள் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன. அதனை திறப்பதற்கான எந்த வழிவகைகளும் செய்யப்படவில்லை." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# வடக்கு, கிழக்குக்கு 25 ஆயிரம் வீடுகள்!

கொழும்பு, மே 24

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முதற்கட்டமாக 25 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கடோல் மற்றும் சீமெந்தைப் பயன்படுத்தி 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான அனுமதியை அமைச்சரவை ஏற்கனவே வழங்கி உள்ளது.

இதற்கமைய ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து யோசனைகள் கோரப்பட்டது. அவர்களில் இலாப நோக்கமற்ற நான்கு நிறுவனங்களின் யோசனைகள் மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளதாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியற் கொள்முதல் குழு சிபாரிசு செய்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் முதற்கட்டமாக 25 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கப்பட உள்ளது. இது தொடர்பில் குறித்த நிறுவனங்களின் யோசனைக்கு அமைய செயற்படுவது தொடர்பில், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சர் என்ற அடிப்படையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த அமைச்சரவை பத்திரத்துக்கு அனுமதி கிடைத்துள்ளது. (ஆ)

# அனர்த்தங்களை எதிர்கொள்ள ஆஸியும், ஐ.நாவும் உதவி!



கொழும்பு, மே 24

இலங்கையில் இயற்கை அனர்த்தத் தயார் நிலையை மேலும் வலுப்படுத்த உதவுவதற்கு அவுஸ்ரேலியா மற்றும் ஐ.நா. அமைப்புகள் முன்வந்துள்ளன.

இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ளும் விடயத்தில் இலங்கைக்கு உதவுவதற்காக அவுஸ்ரேலிய அரசாங்கமும், யுனிசெவ் மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியன ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இதன் அடிப்படையில் அவுஸ்ரேலிய அரசாங்கமும் ஐ.நா. அமைப்புகளும் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளும் இலங்கையின் திறனை வலுப்படுத்துவதற்கான மூன்று வருட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உள்ளன.

இந்தத் திட்டத்துக்கு 750,000 அவுஸ்ரேலிய டொலர்களை செலவிடுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

2004 ஆண்டு சுனாமி இலங்கையைத் தாக்கியதில் இருந்து, அவுஸ்ரேலியா இலங்கையின் பேரிடர் முகாமைத்துவம் மற்றும் அவசர நிலை நடவடிக்கைகளுக்காக உதவி வருகின்றது என இலங்கைக்கான அவுஸ்ரேலியத் தூதரகத்தின் அபிவிருத்தி ஒத்துழைப்பு பிரிவின் தலைவர் விக்டோரியா கோக்லே தெரிவித்துள்ளார்.

"இலங்கை இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்வதற்காகவும், துரித நடவடிக்கைகளை எடுப்பதை உறுதி செய்வதற்காகவும் ஐ.நா.வின் இரு அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். முல்லைத்தீவு, மட்டக்களப்பு, இரத்தினபுரி, காலி உட்பட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மாவட்டங்களை இலக்குவைத்தே இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளோம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவசர நிலையை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் இருப்பதை உறுதிசெய்வதற்கும், உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கூடிய திறனை வலுப்படுத்துவதற்கும் முதலீடு செய்யவேண்டியது அவசியம். இயற்கை அனர்த்தங்களின் போது 25 ஆயிரம் பேருக்கு இந்த திட்டத்தின் கீழ் யுனிசெவ்வும், உலக உணவுத் திட்டமும் உதவிகளை வழங்கும். சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் ஆகியோரே இந்தத் திட்டத்தின் முக்கிய இலக்கு எனவும் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதி இயக்குநர் நகுயென் டக் ஹோங் தெரிவித்துள்ளார். (ஆ)


## உபகரணம் வழங்கல்


கரவெட்டி பிரதேச செயலகத்தில் சமூக சேவை பிரிவால் பொன்னம்பல வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு உடைகள், விளையாட்டு உபகரணங்கள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு, கரவெட்டி பிரதேச செயலர் ஈதயாரூபன் தலைமையில் இடம்பெற்றது.(ஆ-11)



# போர் பாதித்த ஆலயங்களுக்கு இராணுவம் உதவித் திட்டம்!





யாழ்ப்பாணம், மே 24

யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட 100 ஆலயங்களின் கட்டுமான வேலைகளுக்கு உதவும் திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 30 ஆலயங்களுக்கு தலா 20 பைக்கெற் சீமெந்துகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு இராணுவத் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு புலனாய்வு ஊடகவியலாளரும், சமூக சேவையாளரும், இராணுவத்தின் மனிதாபிமான வேலை திட்டங்களுக்கான நாடளாவிய இணைப்பாளருமான ஏ. செல்வா தலைமை தாங்கினார்.

இதன்போது, யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி குறித்த ஆலயங்களின் பிரதிநிதிகளிடம் சீமெந்துப் பைகளைக் கையளித்தார்.

ஏனைய ஆலயங்களுக்கான உதவிகள் கட்டம் கட்டமாக எதிர்வரும் தினங்களில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

எதிரொலி Ethiroli
வியாழன், 24 மே 2018 ethirolimedia@gmail.com

# இறந்தும் போராடுதல்

தூத்துக்குடிப் படுகொலைகளால் தகித்துக் கொண்டிருக்கிறது தமிழகம். இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 8 பேர் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாகவும், 77 பேர் காயமடைந்துள்ளதாகவும் களத்தில் நிற்கும் ஊடகவியலாளர்கள் சொல்கிறார்கள்.

நேற்று இரண்டாம் நாளாகவும், பொலிஸாரின் வேட்டை தடியடி ரூபத்தில் தொடர்ந்தது. வீதியில் காணும் அப்பாவிகளை, கும்பலாகப் பொலிஸார் தடியால் போட்டு, தாக்கினார்கள். கல்லெறி வீச்சிலும் ஈடுபட்டார்கள். பொலிஸ் தரப்பைச் சேர்ந்த 15 பேருக்கு பொதுமக்கள் அடித்து விட்டதாகவும், ஒரு பொலிஸ் வாகனத்துக்கு தீ வைத்ததாலுமே இப்படி நேற்றும் கடுமையாக நடந்துகொண்டதாகப் பொலிஸார் சொல்லியுள்ளனர். ஊரையே சுடுகாடாக்கினால் மக்கள் பொங்கியெழுத்தானே செய்வார்கள். மக்களின் கோபக் கனலில் இருந்து தப்பிக்க, பொலிஸார் நேற்று முன்தினமே தூத்துகுடியில் இருந்து விலக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டதால், தூத்துக்குடியின் நிலைமை இன்னும் சிக்கலான கட்டத்தை அடைந்துள்ளது.

அத்தோடு, தூத்துக்குடியில் பொதுமக்கள் மீது பொலிஸார் தற்செயலாகவோ, அல்லது ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாததால் சூழ்நிலையின் நிமித்தமோ துப்பாக்கிச் சூட்டை நடத்தவில்லை. கடந்த சில நாள்களாக மிக நன்கு திட்டமிட்டு , யார், யாரைக் கொல்லவேண்டும் என்று தீர்மானித்த பின்னரே சுடுகலன்களோடு வாகனத்தின் மேலே ஏறி நின்று , குறி பார்த்துச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் அனைவருமே இந்தப் போராட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள். எல்லாக் கிராமங்களை சேர்ந்தவர்களையும் முகநூலின் வழியே இணைத்த இளைஞர்கள்.

பொலிஸார், முழங்காலுக்கு கீழ் யாரையும் சுடவில்லை. எல்லோரையும் தெளிவாக நெஞ்சு, முகம் என உயிர் போகும் தூரத்தில் வைத்து சுட்டிருக்கிறார்கள். அதிலும் ஒரு பொலிஸ்காரருடன் வாதம் செய்த ஒரு பெண்ணின் வாயில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

கண்ணீர்க் குண்டு இல்லை. வானை நோக்கி மூன்றுமுறை சூடு இல்லை. காலுக்கு கீழ் சுடப்படவில்லை. நிகழ்த்தப்பட்டவை யாவும் தெளிவாக அடையாளம் காணப்பட்ட படுகொலைகளே.

இந்த நிலையில், இறந்தவர்களின் உடலங்களையும் தங்கள் போராட்ட ஆயுதமாக தூத்துக்குடி மக்கள் மாற்றியுள்ளனர். இறந்தோரின் உடல்களை உறவினர்கள் பொறுப்பேற்க வேண்டுமாயின், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதாக அரசு எழுத்து மூல உத்தரவு பிறப்பிக்க வேண்டுமெனவும், போராடிய மக்களைச் சுட்டுக் கொன்ற பொலிஸார் மீது கொலை வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டுமெனவும் அந்த மக்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அப்படி இரும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தால் மட்டுமே, சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உடலங்களை கையேற்போம் என உறவினர்கள் சொன்னதால், என்ன செய்வதென்று தெரியாமல் அரசு திணறுகிறது. சடலங்கள் இருக்குமட்டும் கொந்தளிப்புக் குறையாது. அப்படி கொந்தளிக்கும் பூமியாக தூத்துக்குடி மட்டுமல்லாமல் தமிழகம் முழுதுமே மாறும் நிலை ஏற்பட்டு, எடப்பாடி அரசுக்கே அது ஆப்பாக மாறிவிடும். இறந்தும் போராடுகிறார்கள் தூத்துக்குடிப் போராளிகள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## இராணுவ அதிகாரிக்குப் பிணை

கொழும்பு, மே 24

மூத்த ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சந்தேகநபரான இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியான மேஜர் பிரபாத் சீவலி புத்வத்த பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கம்பகா இம்புல்கொடவில் கடந்த 2013ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாள், ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோனும் அவரது மனைவியும் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு, மேஜர் சீவலி புலத்வத்த கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டார். 2017 ஏப்ரல் 7ஆம் திகதி கம்பஹா நீதிமன்றம், அவரை பிணையில் விடுவித்திருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை கம்பஹா நீதிமன்றம் மேஜர் புலத்வத்தைக்கு அழைப்பாணை விடுத்திருந்தது. எனினும் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில், கடந்த திங்கட்கிழமை சரணடைந்தார்.

இதையடுத்து அவரை நிபந்தனைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. (அ)



## யானையைக் கொன்ற அதிகாரிக்கு பிணை

முல்லைத்தீவு, மே 24

முல்லைத்தீவு- தேராவில் பகுதியில் காட்டு யானை ஒன்று மரணமடைந்த சம்பவத்தில் குற்றம்சாட்டப்பட்டு இராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டு பிணையில்விடுவிக்கப்பட்டுள்ளார்.

தேராவில் பகுதியில் உள்ள 68ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த இராணுவ முகாமில் இருந்து, சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டிருந்த மின் இணைப்பில் சிக்கி நேற்றுமுன்தினம் அதிகாலை காட்டு யானை ஒன்று மரணமடைந்திருந்தது.

யானை இறந்த சம்பவத்தை அறிந்து அங்கு சென்ற இராணுவத்தினர், மின்சார இணைப்பை அகற்றி தடயங்களை அழித்திருந்தனர். எனினும், இறந்து போன யானையின் உடலை உடற்கூற்றியல் பரிசோதனைக்கு உட்படுத்திய மருத்துவர், மின்சாரம் தாக்கியே யானை மரணமானதாகத் தெரிவித்தார்.

இதையடுத்து, மின்சார இணைப்பை ஏற்படுத்தி, யானையின் சாவுக்கு காரணமான இராணுவ முகாம் பொறுப்பதிகாரியான கப்டனைக் கைது செய்த பொலிஸார், அவரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவரை 1 இலட்சம் ரூபா பிணையில் செல்ல நீதிவான் அனுமதி அளித்தார். (இ)

## வள்ளுவர் விழா யாழில் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் சிவகணேசன் புடைவையகமும் இணைந்து நடத்தும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்ச்சங்கத் தலைவர் விரிவுரையாளர் ச. லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மலையகக் கிராமிய நடனம், திருக்குறளும் முகாமைத்துவமும் என்ற பொருளில் அமைந்த ஆய்வரங்கம், கொட்டகலை ஆசிரிய கலாசாலை ஆசிரியர்கள் வழங்கும் நாட்டிய நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் தொடக்கவுரையை தமிழ்ச்சங்கத்தின் உபதலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாசும் சிறப்புரையை வள்ளுவரின் முற்போக்குச் சிந்தனைகள் என்ற பொருளில் கொட்டகல ஆசிரிய கலாசாலை அதிபர் சந்திரலேகா கிங்ஸ்லியும் ஆற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியை தலைமையில் வள்ளுவர் வழி முகாமைத்துவம் என்ற பொருளில் ஆய்வரங்கம் இடம்பெறவுள்ளது. இதில் திருக்குறளில் திட்டமிடல் என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளார் கலாநிதி சி.சிவேசனும், திருக்குறளில் ஒழுங்கமைத்தல் என்ற பொருளில் கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் பாரதி கெனடியும் திருக்குறளில் ஆட்சேர்ப்பு என்ற பொருளில் திறந்த பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ.சிவலோகதாசனும் திருக்குறளில் வழிநடத்தல் என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணாவும் திருக்குறளில் கட்டுப்படுத்தல் என்ற பொருளில் கலாநிதி எம்.பி.எம்.இஸ்மாயிலும் உரையாற்றவுள்ளனர். ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வள்ளுவர்வழி முகாமைத்துவம் என்ற பெயரில் நூலாக வெளியிடப்படும். இதனை தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைப்பார்.

பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருக்குறள் தேர்வு தொடர்பான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது. இதனை போட்டி இணைப்பாளர் விரிவுரையாளர் கு. பாலஷண்முகன் நெறிப்படுத்துவார். நிறைவு நிகழ்வாக கொட்டகலை ஆசிரிய கலாசாலையினர் வழங்கும் உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் என்ற பொருளில் அமைந்த நாட்டிய நாடகம் இடம்பெறும். இந்நாட்டிய ·நாடகத்திற்குரிய நட்டுவாங்கம் - விரிவுரையாளர் சுமித்தா பிரசாந்தன், பாட்டு- ஜெ.மதுசிகன், வயலின் - ப.சியாமகிருஷ்ணா, மிருதங்கம் - க. நந்தகுமார் ஆகியோர் பங்குகொள்ளவுள்ளனர். நன்றியுரையை பொதுச் செயலாளர் இ.சர்வேஸ்வராவும் நிகழ்ச்சித் தொகுப்பை: சி.சிவஸ்கந்தசிறியும் ஆற்றுவர். (அ)

## எச்சரிக்கையை மீறியவருக்கு வெள்ளம் சொன்ன பாடம்

புத்தளம், மே 24

சிலாபம் - கொழும்பு வீதியில் புத்தளம் மாதம்பே பிரதேசத்தில், பெருக்கெடுத்திருந்த வெள்ளத்தின் ஊடான பாதையில் பயணிக்க வேண்டாம் என பொலிஸார் வழங்கிய ஆலோசனையை கவனத்தில் கொள்ளாது மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் அந்த வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளார்.

பின்னர் குறித்த இடத்திலிருந்த மாதம்பே பொலிஸாரும் பிரதேச இளைஞர்கள் சிலரும் நீரில் அடித்துச்செல்லப்பட்டவரை மீட்டுள்ளனர். எனினும் அவரது மோட்டர் சைக்கிள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. (இ)

# யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க திருக்குறள் தேர்வு முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களிடையே கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்திய திருக்குறள் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி முதலாம் இடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் நி.சிவாஜனும் இரண்டாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி ர.நிவேதாவும் மூன்றாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி கோ.யனோவாவும் நான்காம் இடத்தை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவி யோ.நிவேதிதா மற்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி ர.நிவோதினி ஆகியோரும் பெற்றுள்ளனர்.

இவர்களுடன்ஜே.ஜெறின்(வேலணை மத்திய கல்லூரி), வி.விக்னா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பி.ராதிகா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ந.தேனுஜா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), சு.சஞ்சிகா (மகாஜனக் கல்லூரி), க.நிதுசா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ப.சுதர்மினி (சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்), சி.பவதர்ஜினி (இளவாலை மெய்கண்டான் ம.வி.), செ.கீர்த்தனா (யாழ்ரன் கல்லூரி) க.கிந்துஷா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோர் திறமைச்சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தமிழ்ச்சங்கமும் சிவகணேசன் புடைவையகமும் இணைந்து நடத்தவுள்ள வள்ளுவர் விழாவின் போது வழங்கப்படவுள்ளதாக தமிழ்ச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர். தேர்வுக்குத் தோற்றிய அனைவரது பெறுபேறுகளையும் தமிழ்ச்சங்கத்தின் இணையத்தளத்தில் (www.thamilsangam.org) பார்வையிட முடியும் எனவும் அறிவித்துள்ளனர். (இ)

## இன்று நாளும் கோளும்

24.05.2018 வியாழக்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 09 ஆம் நாள்

தசமி பி.ப. 08.56 வரை | உத்தரம் மு.ப. 10.13 வரை | குளிகை மு.ப. 09.00-10.30

இராகுகாலம் 01.30- 03.00 | சுபநேரம் காலை 10.30 - 11.30 | எமகண்டம் 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேன்மை | பரிவு | நன்மை | பகை | யோகம் | வரவு | நலம் | பிரயாணம் | சிந்தனை | கவனம் | பெருமை | பிரதமை |

# விலையேற்றத்துக்கு எதிராக வவுனியாவிலும் ஆர்ப்பாட்டம்







வவுனியா, மே 24

எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சமூக விழிப்பிணர்வுக்கான மக்கள் அமைப்பினர் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது, "நிறுத்து நிறுத்து விலையேற்றத்தை நிறுத்து", "அரிசி தேங்காய்க்கு விலையேற்றம் பியருக்கோ விலை குறைப்பு", "குடிக்கக் கொடுத்து குடி கெடுக்கும் அரசாங்கம்", "எரிபொருள்களின் விலையேற்றத்தை மீளப் பெறு" போன்ற சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர். (ஆ)

# காட்டுப்புலத்திலும் வெண்கரம் படிப்பகம்





சுழிபுரம், மே 24

சுழிபுரம் - காட்டுப்புலத்தில் வெண்கரம் இலவசப் படிப்பகம் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது. அருள் தீபம் சனசமூக நிலையத் தலைவர் எஸ். ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இதன் ஆரம்ப நிகழவில், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான சி.இதயகுமாரன், செ.கிருஸ்ணா, வெண்கரம் பிரதான செயற்பாட்டாளர் மு.கோமகன், வலிகாமம் கல்வி வலயத் தமிழ் ஆசிரிய ஆலோசகரும் ,வெண்கரம் ஆலோசகருமான ச.சுகுணா, காட்டுப்புலம் அ.த.க பாடசாலை அதிபர் எஸ்.சிவானந்தராசா, கிராம சேவையாளர் ஜீவராசா மற்றும் கல்வியியலாளர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வெண்கரம் நிறுவனம் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றி, அந்தக் கிராமங்களை வலுப்படுத்தும் நோக்கத்துடன் கல்விச் செயற்பாட்டை முதன்மையாகக் கொண்டு சமூகநலச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

பொன்னாலையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட படிப்பகம், சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக பாண்டவெட்டை மற்றும் காட்டுப்புலத்தில் உள்ள மாணவர்களின் நன்மை கருதி அங்குள்ள கிராமமட்ட அமைப்புக்கள், வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரின்அனுசரணையுடன் வெண்கரம் படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# மில்லியன்களை செலவிடும் கோத்தா !

## மங்கள குற்றச்சாட்டு





கொழும்பு, மே 24

தம்மைக் கைது செய்வதைத் தடுக்கும் நோக்கில், நீதிமன்றத்தின் உத்தரவைப் பெறுவதற்காக கோத்தாபய ராஜபக்ச சட்டவாளர்களுக்கு மில்லியன் கணக்கான ரூபா பணத்தைச் செலவிடுகிறார் என்று நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

"கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக நீதிமன்றங்களில் பல வழக்குகள் உள்ளன. அவர் தவறு செய்யவில்லை என்றால், நீதிமன்றத்தில்முன்னிலையாக வேண்டும் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு முறையற்ற விதத்தில் இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொடுத்தமை, நேசன் இதழின் ஆசிரியர் கீத் நொயார் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டமை, ரிவிர ஆசிரியர் உபாலி தென்னக்கோன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கப்பட்டமை, சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் படுகொலை செய்யப்பட்டமை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை, வெலிக்கடைச் சிறையில் 26 கைதிகள் படுகொலை செய்யப்பட்டமை, வெலிவேரியவில் ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமை என்று கோத்தாபய ராஜபக்ச பல வழக்குகளில் சந்தேக நபராக குறிப்பிடப்பட்டுள்ளார்.

நாங்கள் ஒன்றும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறவில்லை. இராணுவ அதிகாரிகளுக்கு மக்கள்மீது எந்த விரோதமும் இல்லை. அவர்கள் கட்டளைகளைப் பின்பற்றி வந்தவர்கள் . இவற்றுக்குப் பின்னால் கோத்தாபய ராஜபக்சவே இருந்தார் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும்.

அவன்ட் கார்ட் பேரம், ராஜபக்ச நினைவிடம், மிக் பேரம் போன்ற ஊழல்களிலும் அவர் தொடர்புடையவர். பிரித்தானியாவில் உள்ள நிறுவனம் ஒன்றின் மூலம் மிக் பேரத்தின் மூலம் 7.8 மில்லியன் டொலரை அவர் திருடியவர் ஆவார் .

அவருடைய பெற்றோர் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். ஆனால், திருடப்பட்ட பணத்தில் அல்ல. அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் தமது பிள்ளையின் இந்தச் செயலுக்காக மிகவும் அதிர்ச்சியடைந்திருப்பார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தல் காலகட்டத்தில், நான் சென்று அவரைச் சந்தித்தாக கோத்தாபய ராஜபக்ச கூறியிருக்கிறார். அது பொய். கடந்த 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கோத்தாபய உள்ளிட்ட ராஜபக்சக்கள், என்னைச் சந்திக்க வேண்டும் என்று கேட்டனர். அவர்களுக்குத் தேவையிருந்தால் என்னை வந்து சந்திக்கலாம் என்று கூறினேன். மகிந்த ராஜபக்ச எனது வீட்டுக்கு வந்தார்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# அனர்த்த உயிரிழப்புக்கு ரூ .10 இலட்சம் இழப்பீடு



கண்டி, மே 24

சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களுக்கு , ஆகக் கூடியது தலா 10 இலட்சம் ரூபா வரையிலும் இழப்பீடு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, வெள்ளத்தில் சிக்குண்ட வீடுகளைச் சுத்தப்படுத்துவதற்கு 10 ஆயிரம் ரூபா பணம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



# மறுசீரமைப்பு அவசியம்: அதுவரை போராடுவோம்!

## சொல்கிறார் மகிந்த திஸாநாயக்க

கொழும்பு, மே 24

மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை. பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் எமது போராட்டத்தை இன்னும் முடிக்கவில்லை. உண்மையான மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படும் வரை எமது போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"அனைவரும் கட்சியில் பாரிய மறுசீரமைப்பை எதிர்பார்த்தனர். இதனூடாக கிராம, நகர மட்டத்தில் கட்சியை விருத்தி செய்யத் திட்டமிட்டோம். இதற்காக கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் பெரும் முயற்சிகளை முன்னெடுத்தனர். முக மாற்றம் ஏற்பட்டாலும் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை. கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகும். எனினும், அதற்காக கட்சியின் தலைவரை இராஜினாமா செய்யுமாறு நாம் கோரவில்லை.

மறுசீரமைப்பு மூலம் தேர்தலில் வெற்றிகொள்ள வேண்டும் என நான் எதிர்பார்கின்றேன். சுயாதீனமாக அமரும் நோக்கம் எனக்கு இல்லை. சபாநாயகர், பிரதி சபாநாயகர் பதவிகளை அனைத்துக் கட்சிகளின் இணக்கத்துடன் தெரிவு செய்ய வேண்டும். ஆகவே, கட்சித் தலைவர்கள் ஒன்று சேர்ந்து இணக்கத்துக்கு வந்து சிறந்த ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# மட்டக்களப்பில் வறுமை ஒழிப்பு!



மட்டக்களப்பு, மே 24


மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 46 கோடி ரூபா நிதியுதவியில், வறுமை ஒழிப்பு அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றங்களைப் பகிர்ந்து கொள்ளும் விசேட நிகழ்வு நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஈஸ்ட் லங்கா சுற்றுலா விடுதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வு, மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த ஐந்து வருடங்களாக அமுல்படுத்தப்பட்ட இந்த விசேட திட்டத்தில் பழப் பயிர்ச்செய்கை, கச்சான் பயிர் உற்பத்தி, விதை நெல் உற்பத்தி, நன்னீர் மீன் வளர்ப்பு உற்பத்தி, சிறிய நீர்ப்பாசன புனருத்தானம், கருவாடு உற்பத்தி என்பன மேற்கொள்ளப்பட்டன. இதனால், சுமார் 7 ஆயிரம் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில், உலக விவசாய நிறுவனத் திட்ட முகாமையாளர் ரோகினி சிங்கராயர், கிழக்கு மாகாணப் பணிப்பாளர் கபில விக்ரமசிங்க, விவசாய அபிவிருத்தி அதிகாரி ஜூட் கிரிசாந், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (ஆ)

# குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை!



கொழும்பு, மே 24

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டில் 19 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிப்புக்குள்ளானவர்களுக்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி மழை காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (ஆ)

# ஆசிரியர் பற்றாக்குறை: திருமலையில் ஆர்ப்பாட்டம்





திருகோணமலை, மே 24

திருகோணமலை, கோமரங்கடவெல வடக்குக் கல்வி வலயத்துக்குட்பட்ட மதவாச்சி சிங்கள மகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி, கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகப் பிரதான கதவை மூடி நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"மதவாச்சி சிங்கள மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்று தொடக்கம் 11 வரையான வகுப்புகள் உள்ளன. இந்தப் பாடசாலையில் 294 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து வரும் எமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுக்க நினைக்கின்றோம். ஆனால், இங்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனை நிவர்த்தி செய்து தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தால் திருகோணமலை - கண்டி பிரதான வீதிப்போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மழையும் வெய்யிலும் மாறி மாறி

நேற்றைக்கு பெய்தது வெறும் மழை இல்லை. மின்னல், இடியோடை கூடின மழை. யுத்த காலத்திலை செல் அடி ஞாபகத்துக்கு வந்திட்டுதாம். அந்தளவு இடி இடியாப் போச்சுது. அதுக்குள்ளை பரிதாபம் கரணவாயிலை தேப்பனும், மேனும் செத்ததுதான். மழை எண்டு தெரிஞ்சும் ரீவி வயறைச் சரிபாத்துக் கொளுவப் போய் முதல் மேனைக் கரண்ட் அடிக்க அவனைப் பிடிக்கப்போன தேப்பனும் கறண்ட் அடிபட்டு இரண்டு பேரும் உடனை சரி. பரவலா மழையாலை கனக்கப் பிரச்சினையள் நடந்திருக்கு. இரண்டு நாளைக்கு முன்னம் மின்னல் அடிச்சு இரண்டு தென்னை மரம் சரியாப்போச்சுது. நேற்றைக்கும் வயிரவற்றை முடியிலை இடி விழுந்ததெண்டு சொல்லினம். உண்மையோ பொய்யோ எண்டு தெரியாது. அதோடை கீரிமலையிலையும் இடி விழுந்ததாம்.

மழை இஞ்சை மட்டுமில்லை அங்காலை தெற்கிலையும், மலைநாட்டையும் ஒரு பதம் பாத்தபடிதான் இருக்குதாம். போன வருசமும் இதே பிரச்சினையால சனம் இடம் பெயந்து போய் வலு கஷ்டப்பட்டவை. இந்த வருசமும் அதேமாதிரி நடந்திருக்குது. என்ன அநியாயமோ தெரியாது. வசதி இல்லாத ஏழைச்சனத்தைத்தான் மழையும் ஒரு கை பாக்கிறனெண்டுதான் நிக்கிது. இந்தக் கிழமையும் தண்ணி வடியாதாம். இதுக்கை றயில் பிரண்டிருக்கு. அப்பிடிக் கனக்க நடந்திருக்கு.

நாட்டிலைதான் உந்தப் பிரச்சினை எண்டால், கடலுக்கை மீன் பிடிக்கப்போனவைக்கும் இடி மின்னல் பிரச்சினை இருக்கிறதாத்தான் கேள்வி. மீன்பிடிக்கேக்கையும் மின்னல் அடிச்சு ஆக்கள் செத்துப்போயிருக்கினம். இரத்தினபுரிப் பக்கம் வெள்ளாதாலை கரண்ட் இல்லையாம். அங்கை மழை ஒரு பக்கம் இரவிலை இருட்டு மற்றப் பக்கம். சனம் போகப் போக்கடி இல்லாமல் அந்தரிக்கினமாம்.

வழக்கமா குடிக்கத் தண்ணி தட்டுப்பாடு. மழை இல்லாததாலை கறண்ட் வெட்டுவினமாம்.எண்டெல்லாம் கதைப்பம். ஆனால் மழை வந்தால் ஒரு நாள்கூட எங்களாலை தாக்குப் பிடிக்கேலாமைக் கிடக்கு. எப்ப இந்த மழை விடும் எண்டு மற்றவையிட்டைக் கேள்வி கேட்டே அவையின்ரை காதைச் செவிடாக்கிப் போடுவம்.

எதுக்கும் மழை பெய்யிறதுதான் நல்லது. நல்ல தண்ணியை நிலம் சேமிக்கும். குளம் குட்டை எல்லாம் தண்ணி நிக்கிறதாலை கிணத்திலை தண்ணி வத்தாது. பயிர் பத்தை எல்லாம் பச்சைப் பசேல் எண்டு கிடக்கும். சூடு தணிஞ்சு எப்பன் குளிர்மையாக் கிடக்க நல்லா நித்திரை வரும். மழை நல்லா பெய்யட்டே எண்டு எல்லாரும் ஆசுவாசப் படவேணும்.. இடை சுகம் இப்பிடியும் மழை பெய்ய வேணும். நிலத்திலை கிடக்கிற ஊத்தையள் கொஞ்சம் கழுவப் படவும் வேணும் எல்லே! மழை பெய்யாட்டி ஊர் உலகம் நாறிப்போகும்.

ஒரு பக்கம் குளிர். மற்றப் பக்கம் சூடு. அதுமாதிரி ஒரு பக்கம் சந்தோஷம். மற்றப் பக்கம் துக்கம். இப்பிடியாத்தானே எல்லாற்றை வாழ்க்கையும் போகுது. அதுக்கு நடுவிலைதான் எல்லா விளையாட்டும். நான் பெரிசு. நீ சின்னன். நீ பெரிசு நான் சின்னன். எண்டு போட்டியும் பொறாமையும். அதாலை சனத்துக்குச் சந்தோஷம் குறைவு.

என்னத்துக்கும் மழை விடட்டும் பாப்பம். மழைக்குள்ளை ஒரு வேலையும் ஓடாது. என்னத்தை எடுத்தாலும் காசும் நட்டம். நேரமும் வீண். சரி நடக்கிறதைப் பாப்பம்.

- வில்லங்கம் விநாசி


# ராஜஸ்தானை வெளியேற்றியது கொல்கத்தா

கொல்கத்தா, மே24

ரஸலின் அதிரடியால், ஐ.பி.எல் தொடரில் இருந்து ராஜஸ்தான் ரோயல்ஸை வெளியேற்றி, அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸும், ராஜஸ்தான் ரோயல்ஸும் வாழ்வா, சாவா என்ற நிலையில் மோதின. இந்தப் போட்டியில் தோல்வியடையும் அணி அடுத்த சுற்றுக்கு போக முடியாது. நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி, முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்து கொல்கத்தாவைத் துடுப்பெடுத்தாட அழைத்தது.

கொல்கத்தா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சுனில் நரேனை, முதல் ஓவரிலேயே 4 ஓட்டங்களோடு அனுப்பிவைத்தார் கௌதம். உத்தப்பா3, ரானா3 , லின்18 ஆகியோரும் வரிசையாக அடுத்தடுத்து வெளியேற, கொல்கத்தாவின் நிலை பரிதாபமானது. ஆனால் அதற்குப் பின்னர் வந்த அணித்தலைவர் தினேஸ் கார்த்திக், இளைய வீரர் சுப்மன் கில்லுடன் இணைந்து அணியை நிமிர்த்த முயன்றார். தினேஸ் கார்த்திகோடு அபார இணைப்பாட்டத்தைக் கொடுத்த சுப்மன் கில் 28 ஓட்டங்களோடு வெளியேற, அவரின் இடத்துக்கு வந்தார் அன்ட்ரூ ரஸல். வந்தவர் முதலில் அடக்கி வாசித்துவிட்டு,



52 ஓட்டங்களோடு தினேஸ் கார்த்திக் வெளியேறியதும் அடித்தாடத் தொடங்கினார். கடைசி வரை ஆட்டமிழக்காமல் அன் ட் ரூ ரஸல் 49 ஓட்டங்களைக் குவிக்க, கொல்கத்தா அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு, 169 ஓட்டங்களை எடுத்தது.

170 ஓட்டங்களைத் துரத்திய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக இறங்கிய ராஹனேயும், திரிபாதியும் அமர்க்களமான தொடக்கத்தைக் கொடுத்தனர். ஓவருக்கு 10 ஓட்டங்கள் என்ற சராசரியில் வெற்றியை நோக்கிப் பயணித்தனர். திரிபாதி 20 ஓட்டங்களோடு வெளியேற, சஞ்சு சாம்சம் களம் புகுந்து, கொல்கத்தாவைத் தெறிக்க விட்டார். சாம்சனும், ரஹானேயும் நிலைத்து நின்று, பின்னர் அதிரடி காட்ட கொல்கத்தா தோல்விமுகத்தை எதிர்கொண்டது. ஆயினும் பின்னர் திடீர் திருப்பமாக ரஹானே 46 ஓட்டங்களோடும், சாம்சன் 50 ஓட்டங்களோடும் வெளியேற, நிலைமை தலைகீழானது. கொல்கத்தா பந்து வீச்சாளர்கள் அதன் பின்னர் ஓட்டங்கள் கொடுப்பதைக் கட்டுப்படுத்த, ராஜஸ்தானால் அடித்தாட முடியவில்லை. இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்களையே ராஜஸ்தான் எடுக்க, 25 ஓட்டங்களால் வென்று, அடுத்த சுற்றில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியை எதிர்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றது கொல்கத்தா அணி. அன்ட்ரூ ரஸல் ஆட்டநாயகனானார்.

(அ)



## தொடர்ச்சிகள்

**அனர்த்தப் பலி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முப்படையினரும் பாதிப்பு நிகழ்ந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் மழை கடுமையாகப் பெய்வதற்கான சாத்தியங்கள் உள்ளதால், அனர்த்தப் பாதிப்பு இன்னும் அதிகரிக்கலாம் எனவும், பல ஆறுகள் உடைப்பெடுக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது. அவ்வாறு ஆறுகள் உடைப்பெடுத்தால் அல்லது வான்கதவுகள் திறந்துவிடப்பட்டால் தாழ் நிலத்தில் உள்ள பல பகுதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இதனால் தாழ்நிலப் பகுதிகளில் உள்ளவர்களை உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறும் கோரப்பட்டுள்ளது.

வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இன்றும் பிற்பகலின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் சில பிரதேசங்களில் 75 மில்லிமீற்றர் அளவில் மழைவீழ்ச்சி பதிவாகலாம் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது

சப்ரகமுவ, மேல், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் 100 முதல் 150 மி.மீற்றருக்கு இடையிலான அளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்று அந்த திணைக்களம் கூறியுள்ளது.

அத்துடன், தொடர்ந்து பெய்துவரும் மழையால் களனி, களு கங்கை, நில்வலா மற்றும் அத்தனகலு ஓயா ஆகியவற்றில் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதுடன் ராஜாங்கனய நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கிங் ஓயாவில் வெள்ளப் பெருக்கைப் பார்வையிடச் சென்ற வென்னப்புவ - லுணுவில பிரதேசத்தைச்சேர்ந்த17வயது சிறுவன் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின்போது அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும், இடிமின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தவிர்த்துக்கொள்ள பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.(அ)

**மின்சாரத்தால்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இருவருமே உயர் அழுத்த மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களாவர்.

"வீட்டில் டிஷ் அன்ரனா பழுதடைந்ததால், கேபிள் இணைப்பை வீட்டுக்கு எடுக்க முற்பட்டவேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கேபிள் ரீவி இணைப்பு வயரில் மின்சார சபையின் உயர் அழுத்த மின் இணைப்பின் கம்பி தொடர்புபட்டிருந்துள்ளது.

மின்சார சபையின் மின் கம்பத்தில் கேபிள் ரீவி இணைப்புக் கட்டப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதியில் மின் கம்பி ஒன்று சேதமடைந்து மின் கம்பி கேபிள் ரீவி இணைப்புடன் தொடர்புபட்டிருந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் வடமராட்சி மின் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கேபிள் ரீவி இணைப்பு வழங்குனர் ஆகியோரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. எனினும் இந்தச் சம்பவம் தொடர்பில் எவரையும் கைது செய்ய முடியாது.

தந்தையையும் சகோதரனையும் காப்பாற்ற இளைய மகன் முற்பட்டபோது, அவர் கையில் காயத்துடன் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்" என்று நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சடலங்கள் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தால் கரவெட்டி பிரதேசமே சோகமயமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் வானகம் போன் சொப் என்ற அலைபேசி விற்பனை நிலையத்தை இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த தந்தையும் மகனும் நடத்திவருகின்றனர்.

அத்துடன், கட்டைவேலி.ப.நோ.கூ.சங்க தலைவராகவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முக்கிய உறுப்பினராகவும் உயிரிழந்தவர்களில் ஒருவரான மயில்வாகனம் ஜெகநாதன் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

**அங்கஜனுக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற வகையில் இந்த நியமனத்துக்கு, மைத்திரிபால சிறிசேனவின் அனுமதிக்காக காத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

எனினும், அங்கஜன் இராமநாதனை பிரதிச் சபாநாயகராக நியமிப்பதற்கு இந்தக் கூட்டத்தில் எதிர்ப்பு வெளியிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அவரை கூட்டமைப்பு ஆதரிக்காது என்று கூறினார் என்று அரசியல் வட்டாரங்களை மேற்கொள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அங்கஜன் இராமநாதன், பிரதிச் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டால், 48 ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தப் பதவியைப் பெற்ற தமிழர் என்ற பெருமையைப் பெறுவார்.

இதற்கு முன்னர், 1968ஆம் ஆண்டு தொடக்கம், 1970ஆம் ஆண்டு வரை ஏ.சிதம்பரம் பிரதிச் சபாநாயகராகப் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

**கிளிநொச்சியில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான முனியாண்டிராஜா ரஞ்சன்(தீபன்) என்பவரின் வீட்டில் ஆயுதங்கள் புதைத்து வைத்திருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற விமானப்படையினர் பொலிஸார், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர் ஆகியோர் முன்னிலையில் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டனர்.

இதன்போது, சுமார் ஆறு அடி ஆழத்தில் பொலித்தீனால் சுற்றப்பட்டு பெட்டி ஒன்றினுள் வைத்து புதைக்கப்பட்டிருந்த வெடிபொருட்களை அடையாளம் காட்டும் கருவி மற்றும் கைத்துப்பாக்கிக்குரிய 5 தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டன.

குறித்த வெடிபொருட்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டின் உரிமையாளர் தீபன் என்கின்ற முனியாண்டிராஜா ரஞ்சன் என்பவர் முன்னர் விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறையில் உயர் தரப்புக்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர் எனவும் மீள் குடியேற்றத்தின் பின்னர் புலிகள் அமைப்பினை மீளக்கட்டமைக்க முற்பட்ட கோபி, அப்பன் ஆகியோரோடு தொடர்புடையவர் என இராணுவத்தால் தேடப்பட்டார். எனினும் அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்று புலம்பெயர் நாட்டில் வசித்து வருகின்றார் என தெரிவிக்கப்படுகிறது .

இதேவேளை, முரசுமோட்டை முருகானந்தா கல்லூரிக்கு அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றின் முற்றத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 40 ரவைப் பெட்டிகள் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டன.

வீட்டு உரிமையாளர் வீட்டின் முற்றத்தில் தகரம் ஒன்று இருப்பதனை அவதானித்து அகற்ற முயன்ற பொழுது ரவைப் பெட்டி ஒன்று இருப்பதனைக் கண்டுள்ளார். உடனடியாக அவர் கிராம சேவையாளருக்கு தகவல் வழங்கியுள்ளார். கிராமசேவையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதனை தொடர்ந்து, கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் அனுமதி பெற்று கிராம சேவையாளர் முன்னிலையில் விசேட அதிரடிப்படையினர் நேற்று அகழ்வினை மேற்கொண்டனர். இதன்போது 40 ரவைப் பெட்டிகள் மீட்கப்பட்டன. (அ)

**நேற்றும் ...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் நேற்றுச் சூடு நடத்தப்படுள்ளது. இதிலேயே காளியப்பன் பலியானார்.

காளியப்பனைச் சுட்டுக்கொன்ற பின்னர், தமிழகப் பொலிஸார் நடந்துகொண்ட விதம் குறித்து நியூஸ்மினிட் செய்தியாளர் அனா ஐசக் என்பவர் பகிர்ந்துள்ள வீடியோ வெளியாகியுள்ளது. அதில், துப்பாக்கிச் சூட்டால் காளியப்பன் கீழே சரிந்து இறந்துகிடக்க அவரைச் சுற்றி 10 முதல்15 பொலிஸார் வேடிக்கை பார்த்தபடி, 'நடிக்கிறான், நடிக்கிறான்' என்று கூற ஒருவர் அதற்கும் ஒருபடி மேலேபோய் தான் வைத்திருந்த லத்திக் கம்பால் காளியப்பனைத் தொட்டு, ஏய் ரொம்ப நடிக்காதே போ' என்று மிரட்டுகிறார். பின்னர் அவரின் பிணத்தை தர தரவென இழுத்துச் சென்றனர். இது சமூக ' வலைத்தளங்களில் வேகமாகப் பரவ, தமிழக அரசுக்கும், பொலிஸாருக்கும் பல்வேறு தரப்புகளும் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

இதேவேளை, தூத்துக்குடியில் சமூக வலைத்தளங்கள் நேற்று முதல் முடக்கப்பட்டுள்ளன.(அ)

(மேலும் செய்தி 7 ஆம் பக்கத்தில்)

**இடி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயக் கோபுரத்தின் சிறு பகுதி உடைந்து விழுந்துள்ளது.

அதேபோன்று, தென்மராட்சி, சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கணினி ஆய்வுகூடத்தையும் நேற்று மதியம் மின்னல் தாக்கியுள்ளது.

கணினி ஆய்வுகூடத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்மானி மின்னல் தாக்கியதில் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் சாவகச்சேரிக்குச் சென்றுஇலங்கை மின்சாரசபையினருடன் இணைந்து தீயை அணைத்துள்ளனர். (அ)

## ஸ்டெர்லைட் ஆலை:

# விரிவாக்கப் பணிகளுக்கு உயர்நீதிமன்றம் தடை!



மதுரை, மே 24

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையின் விரிவாக்கப் பணிகளுக்கு , உயர்நீதிமன்ற மதுரைக் கிளை இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்த நிலையில், போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்மூடித்தனமாகத் துப்பாக்கி சூடு நடத்தினர். போராட்டக்காரர்களை கலைக்க எவ்வளவோ யுக்திகள் இருந்தும், தேச விரோதிகளைச்சுடுவது போன்று பொதுமக்களைச் சுட்டமை நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்துக்கு எதிரான வழக்கில், உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நேற்றுத் தீர்ப்பு வழங்கி உள்ளது.

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் பேராசிரியை பாத்திமா வழக்குத் தொடர்ந்திருந்தார். அதில், ஸ்டெர்லைட் ஆலையின் 2 ஆவது பிரிவு அனுமதி பெறப்பட்ட இடத்தில் விரிவாக்கப் பணியை நிறுத்த உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார். ஆலை விரிவாக்கம் தொடர்பாக பொதுமக்களின் கருத்தையும் நிர்வாகம் கேட்கவில்லை என்றும் மனுவில் கூறியிருந்தார்.

இந்த நிலையில், வழக்கின் வாதப்பிரதிவாதங்கள் முடிவடைந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலையின் விரிவாக்கப் பணிகளை நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.(ஆ)

# தூத்துக்குடி துயரத்துக்கு தமிழக அரசே காரணம்



## கமல் ஆதங்கம்

சென்னை, மே 24

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நீதி கேட்டு மக்கள் அமைதியாகப் போராடிய போதெல்லாம் அலட்சியப்படுத்தியது அரசு. அரசின் அலட்சியமே அனைத்துத் தவறுகளுக்கும் காரணம். இதில் குடிமக்கள் குற்றவாளிகள் இல்லை என்று நடிகரும், மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல்ஹாசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்கள்தான் எப்பொழுதும் உயிரிழக்கிறார்கள். முன்பு ஆலையால். இப்போது அரசின் ஆணையால். மக்கள் வாழும் பகுதியை மாசுப்படுத்திக் கொண்டிருக்கிறது ஸ்டெர்லைட் ஆலை. துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்டது யார் என்பது தான் தமிழகத்தின் இன்றையே கேள்வி. இந்த கேள்விக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும். மேலிடத்தின் உத்தரவு இல்லாமல் துப்பாக்கிச்சூடு நடந்திருக்காது. தூத்துக்குடியில் நடந்த சோகத்தை தமிழகம் மறக்காது.

போராட்டக்காரர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தாமல், துப்பாக்கிச் சூடுவரை சென்றது ஏன். ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்பதே இன்றைய நிலை. போராட்டத்துக்கு மக்கள் நீதி மய்யம் துணை நிற்கும். பேச்சுவார்த்தையில் தீர்க்க வேண்டியதைப் போராட்டத்தில் தீர்க்க முடியும் என்பது விவேகம் அல்ல. போராட்டம் என்ற பெயரில் மக்களைக் கொல்வதில் அர்த்தமில்லை." என்று கூறப்பட்டுள்ளது. (ஆ)



# ஸ்டெர்லைட் உரிமையாளர் வீடு லண்டன் தமிழர்களால் முற்றுகை!

லண்டன், மே 24

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து, லண்டனில் உள்ள ஸ்டெர்லைட் ஆலை உரிமையாளரின் வீட்டை முற்றுகையிட்டு, லண்டன்வாழ் தமிழர்கள் போராட்டம் ஒன்றை நடத்தி உள்ளனர்.

தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என அந்தப் பகுதி மக்கள்போராடி வருகின்றனர். போராட்டத்தின் 100 ஆவது நாளான நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்தும்போது போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது. இந்த மோதல் கலவரமாக மாறிய சூழலில் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்த வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இதையடுத்து, போராட்டக்காரர்களை நோக்கி பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 11 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், தூத்துக்குடி சம்பவத்தைக் கண்டித்து லண்டனில் உள்ள ஸ்டெர்லைட் ஆலை உரிமையாளர் வீட்டுக்கு முன்னால் தமிழர்கள் போராட்டம் நடத்தினர்.

லண்டனில்ஸ்டெர்லைட் ஆலை உரிமையாளர் அனில் அகர்வாலின் வீடு அமைந்துள்ளது. அங்கு லண்டன் வாழ் தமிழர்கள் ஒன்று திரண்டனர். இதன்போது, ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகக் கண்டனக் கோஷங்களை எழுப்பினர். கைகளில் பதாகைகளை ஏந்திப் போராட்டம் நடத்தினர். இதனால், அந்தப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (ஆ)

# ஊடகவியலாளர்கள் மீதும் தூத்துக்குடியில் தாக்குதல் !

தூத்துக்குடி, மே 24

தூத்துக்குடியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தின்போது, ஊடகவியலாளர்கள் மீதும் வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தி உள்ளது. இதில், 'தி இந்து' புகைப்படக் கலைஞர் உள்ளிட்ட 4 பேர் படுகாயமடைந்தனர். 4 மோட்டார் சைக்கிள்களும் சேதப்படுத்தப்பட்டன.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூடக் கோரி நடைபெற்ற போராட்டம் வன்முறையில் முடிந்தது. இந்தப் போராட்டத்தை பதிவு செய்த ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தூத்துக்குடி - திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் வந்த அரச வாகனத்தை போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்திக் கட்டையால் அடித்துச் சேதப்படுத்தினர். அப்போது, அங்கு நின்ற பத்திரிகைப் புகைப்படக்கலைஞர்கள், தொலைக்காட்சி புகைப்பிடிப்பாளர்கள் அந்தச் சம்பவத்தைப் படம் பிடிக்க முயன்றனர். உடனே, வன்முறையில் ஈடுபட்ட சிலர், இதை யாரும்புகைப்படம் எடுக்கக்கூடாது எனக் கூறி பத்திரிக்கையாளர்கள் மீது கற்களை வீசித்தாக்கினர். மேலும், கமராக்களை வலுக்கட்டாயமாகப் பறித்து, அதில் பதிவாகியிருந்த காட்சிகளையும் அழித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஆ)

# மலேசிய பிரதமரிடம் விசாரணை

கோலாலம்பூர், மே 24

மலேசிய தலைநகர்கோலாலம்பூரில் உள்ள ஊழல் தடுப்பு ஆணையத்தில் அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக் நேற்றுமுன்தினம் ஆஜராகி உள்ளார். இதன்போது, அவரிடம்பல மணித்தியாலங்கள் விசாரணை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரை நவீனப்படுத்த 2009 ஆம் ஆண்டில் மலேசிய மேம்பாட்டு நிறுவனத்தை அப்போதைய பிரதமர் நஜீப் ரசாக் ஏற்படுத்தினார். இந்த நிறுவனத்தில் இருந்து நஜீப்பின் வங்கிக் கணக்குக்கு 3,985 கோடிரூபா பணம் மாற்றப்பட்டதாக முறைப்பாடு எழுந்தது.

அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நஜீப் ரசாக் தோல்வி அடைந்தார். எதிர்க்கட்சிகள் கூட்டணி வெற்றி பெற்று மகாதிர் முகமது பிரதமரானார். அதன்பின் நஜீப் மீதான ஊழல் வழக்கு விசாரணை வேகம் பெற்றது.

இந்த நிலையில், மலேசிய மேம்பாட்டு நிறுவன மோசடி வழக்கில் கோலாலம்பூரில் உள்ள ஊழல் தடுப்பு ஆணையத்தில் நஜீப் ரசாக் நேரில் ஆஜரானமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ஜக்சனின் நடன இரகசியம் வெளியானது!






வொஷிங்டன், மே 24

பொப் இசைக் கலைஞர் மைக்கேல் ஜக்சன் தனது ஸ்மூத் கிரிமினல்(Smooth Criminal) இசைத் தொகுப்பில், எவ்வாறு கீழே விழாமல் நேர்கோட்டில் சாய்ந்து நடனமாடினார் என்பதை நரம்பியல் நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

1987 ஆம் ஆண்டு வெளியான அந்த இசைத் தொகுப்பில், கீழே விழாமல் 45 டிகிரி கோணத்தில் தனது உடலை நேர்கோட்டில் சாய்த்து நடனமாடினார் மைக்கேல் ஜக்சன்.

பலரும் அவரைப் பார்த்துச் செய்ய முயன்ற மிகவும் பிரபலமான அந்த நடன அசைவின் பின்னணியில், அதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட காலணிகள் மற்றும் ஜக்சனின் உடல் வலிமை என்பன காரணமாக இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

சண்டிகரில் உள்ள முதுநிலை மருத்துவக்கல்வி மற்றும்ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த மஞ்சுல் திரிபாதி மற்றும்குழுவினர்இது குறித்த ஆய்வுக் கட்டுரை ஒன்றை ஜேர்னல் ஒப் நியூரோசர்ஜரி எனும் சஞ்சிகையில் வெளியிட்டுள்ளனர்.

அதில், "நன்கு பயிற்சி பெற்ற நடனக்கலைஞர்களால் தங்கள் உடலை நேர்கோட்டில் 25 முதல் 30 டிகிரி கோணம் வரை சாய்க்க முடியும். மைக்கேல் ஜக்சன் புவி ஈர்ப்பு விசை கீழே இழுக்காமல் தனது உடலை 45 டிகிரி சாய்த்துள்ளார். அவரின் அந்த நடன அசைவைச்செய்யும்போது, நேராக இருக்கும் முதுகின் தண்டுவடத்தை விடவும், கணுக்கால்களில்தான் அதிகம் அழுத்தம் உண்டாகும். எனவே, மைக்கேல் ஜக்சன்போன்ற திறமையும் வலிமையையும் உள்ளவர்களால் கூட ஒரு குறிப்பிட்ட அளவுதான் முன்னோக்கி நேராகச் சாய முடியும். எனினும், அவரால் இன்னும் கூடுதலாகச் சாய முடிந்ததன் காரணம் அதற்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட காலணிகளே." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது காலணிகளின் கீழ் பகுதியில் 'ஏ' வடிவத்தில் ஒரு விரிசல் உண்டாக்கப்பட்டிருந்தது. அதில் தடுப்பாகக் கீழ் நோக்கி ஒரு ஆணி சொருகப்பட்டிருக்கும். மைக்கேல் ஜக்சன் முன்னோக்கிச் சரியும் போது, அந்த ஆணி தரையை நோக்கி கீழே சென்று, தளத்துடன் இறுக்கப் பற்றிக்கொள்ளும். அது அவருக்குக் கூடுதல் வலுவைக் கொடுத்துள்ளது.

இந்தக் காலணி கண்டுபிடிக்கப்படும் முன்பு, தனது இடுப்பைச் சுற்றி க்கசை ஒன்றைக்கட்டிக்கொண்டு ஒரு கயிற்றின் உதவியுடன் மைக்கேல் அந்த நடன அசைவை ஆடியுள்ளார்.

"இந்தக் காலணிகளின் உதவி இருந்தாலும்அந்த நடன அசைவுக்கு அதீத உடல்வலிமை தேவை. இதில், கணுக்காலில் காயம் உண்டாவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதைச் செய்வது அவ்வளவு ஒன்றும் எளிதல்ல." என்கிறார் மருத்துவர் மஞ்சுல். (ஆ)

# இகார்டிக்கு இடமில்லை




ஆர்ஜென்டீனா, மே 24

ரஷ்யாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கான 23 பேர் கொண்ட ஆர்ஜென்டீனா அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்த அணியில் முன்கள வீரரான மௌரோ இகார்டி இடம்பெறவில்லை என்பதால் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துடைந்துள்ளனர்.

இத்தாலிய 'சீரி ஏ' கழகமான இன்டர் மிலன் அணியின் தலைவரான மௌரோ இகார்டியே நடப்பு சீரி ஏ பருவகாலத்தில் அதிகமாக 29 கோல்களைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், லயனல் மெஸ்ஸியுடன் சேர்ஜியோ அகுரோ, கொன்ஸலோ ஹியூகைனும் லயனல் மெஸ்ஸியை ஒத்த விளையாடும்பாணியைக் கொண்ட போலோ டிபாலாவும் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

குரோஷியா, நைஜீரியா, ஐஸ்லாந்துடன் குழு 'டி'யில் இடம்பெற்றுள்ள ஆர்ஜென்டீனா, அடுத்த மாதம் 16ஆம் திகதி மாலை 6.30மணிக்கு இடம்பெறவுள்ள ஐஸ்லாந்துடனான போட்டியுடன் தனது உலகக் கிண்ணத் தொடரை ஆரம்பிக்கின்றது.

ஆர்ஜென்டீனா அணி விபரம்:

கோல் காப்பாளர்கள்: சேர்ஜியோ றொமாரோ, வில்லி காபலெரோ, பிராங்கோ அர்மனி.

பின்கள வீரர்கள்: கப்ரியல் மெர்காடோ, பெடெரிக்கோ பஸியோ, நிக்கொலஸ் ஒட்டமெண்டி, மார்கோஸ் றோஜோ, நிக்கொலஸ் டக்ளபிக்கோ, ஸ்கேவியர் மஷரானோ, மார்கோஸ் அகுனா, கிறிஸ்டியன் அன்சல்டி.

மத்தியகள வீரர்கள்: எவர் பனீகா, லூகாஸ் பிக்லியா, அஞ்சல் டி மரியா, ஜியோவனி லோ செல்சோ, மனுவல் லன்ஸினி, கிறிஸ்டியன் பவோன், மக்ஸ்மில்லியானோ மெஸா, எடுவார்டோ சல்வியோ.முன்கள வீரர்கள்: லயனல் மெஸ்ஸி, கொன்ஸலோ ஹியூகைன், போலோ டிபாலா, சேர்ஜியோ அகுரோ.(அ)




# டிவில்லியர்ஸ் திடீர் ஓய்வு

கேப்டவுன், மே 24

தென்னாபிரிக்க அதிரடி கிரிக்கெட் வீரர் ஏ.பி.டிவில்லியர்ஸ் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இவரது திடீர் அறிவிப்பு கிரிக்கெட் உலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

360 டிகிரி வீரர் என்று பெயர் பெற்ற மிகச்சிறந்த அதிரடி வீரரான வில்லியர்ஸ் திடீரென ஓய்வை அறிவித்தது கிரிக்கெட் உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் டெஸ்ட் போட்டியில் ஆடவந்த டிவில்லியர்ஸ் சிம்பாப்வேவுக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் ஆடி, பிறகு இந்திய அணி அங்கு சென்றபோது கலக்கல் இன்னிங்ஸ்களை ஆடி தென்னாபிரிக்க வெற்றியில் பெரிய பங்களிப்பு செய்தார். களத்தடுப்பிலும் அவர் கில்லாடி.

இந்திய தொடருக்குப் பிறகு சர்ச்சைகள் நிரம்பிய அவுஸ்ரேலியத் தொடரில் மிகச்சிறப்பாக ஆடி அவுஸ்ரேலியாவுக்குத் தலைவலி கொடுத்தார்.

"நான் களைப்படைந்து விட்டேன். அனைத்து சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தும் உடனடியாக ஓய்வு பெற முடிவெடுத்து விட்டேன்.

இது மிகவும் கடினமான முடிவுதான். நான் நீண்ட சிந்தனைக்குப் பிறகே இந்த முடிவுக்கு வந்துள்ளேன். 114 டெஸ்ட் போட்டி, 228 ஒருநாள் போட்டிகள், 78 ரி-20 சர்வதேச போட்டிகள் விளையாடிவிட்டேன். இதற்குப் பிறகு மற்றவர்கள் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும். என்னுடைய வாய்ப்புகளைப் பெற்று விட்டேன், நேர்மையாகக் கூற வேண்டுமெனில் நான் களைப்படைந்து விட்டேன்.

இதுதான் சரியான தருணம். அனைத்தும் முடிவுக்கு வர வேண்டியதுதான். உலகம் முழுதும் உள்ள ரசிகர்கள், தென் ஆபிரிக்க ரசிகர்கள் என்னிடம் காட்டிய பெருந்தன்மைக்கு நன்றி.

உங்கள் புரிதலுக்காக, அயல்நாடுகளில் ஆடும் திட்டம் இல்லை. ஆனாலும் உள்நாட்டு கிரிக்கெட்டில் டைட்டன்ஸ் அணிக்கு தொடர்ந்து ஆடுவேன், டுபிளெசிஸ் மற்றும் தென்னாபிரிக்க அணியின் மிகப்பெரிய ஆதரவாளராக நான் இருப்பேன்" இவ்வாறு உருக்கமாக பேசியுள்ளார் டிவில்லியர்ஸ். (அ)

## பொலிஸ் கரப்பந்தில்


# ஆவரங்கால் மத்தி சாதித்து சம்பியன்

யாழ்ப்பாணம், மே 24

அச்சுவேலி பொலிஸாரால், குறித்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் மத்தி சம்பியனானது.

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலாவது செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞர் அணி கைப்பற்றினாலும், அடுத்த 2 செற்களில் ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்தி அவற்றை முறையே 25:10, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தன் வசமாக்கியது ஆவரங்கால் மத்தி. இதனால் 2:1 என்ற செற் கணக்கில் முன்னிலை பெற்றது ஆவரங்கால் மத்தி. ஆனால் மீண்டும் நான்காவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இந்து இளைஞர். முதல் நான்கு செற்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா 2 செற்களைக் கைப்பற்றி சமநிலையை அடைந்தன. இதனால் இறுதி செற்றில் வெற்றிபெறும் அணியே சம்பியன் என்ற நிலையில் அந்த தீர்க்கமான செற்றை, 15:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியனானது. (அ)



# 50 வீரர்கள், அதிகாரிகளை ஆஸி.யில் காணோம்

கான்பரா, மே 24

அவுஸ்ரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்திலுள்ள கோல்ட் கோஸ்ட் நகரில் கடந்த மாதம் இடம்பெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்து ஒரு மாதத்துக்கு மேல் ஆகியுள்ள நிலையில், காணாமல்போயுள்ள 50 தடகள வீரர்கள், அதிகாரிகளை அவுஸ்ரேலிய அதிகாரிகள் தேடி வருவதாகவும் இன்னொரு 190 பேர் புகலிடத்தை எதிர்பார்ப்பதாகவும் அவுஸ்ரேலியாவின் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீற்றர் டட்டன் தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ணிலும் 2002ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்தின் மன்செஸ்டரிலும் 2014ஆம் ஆண்டு ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவிலும் இடம்பெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றபோதும் இம்முறை இப்படி காணாமல் போன அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதாக அவுஸ்ரேலியா தெரிவித்துள்ளது. (அ)

# கைவிடப்படும் மைதானம்



ஒக்லாந்து, மே 24

நியூஸிலாந்து கிரிக்கெட் சபை, அந்த நாட்டில் புகழ்பெற்ற மைதானமான ஈடன் பார்க்கை கைவிட்டு புதிய கிரிக்கெட் மைதானத்தை தயார் செய்கிறது.

கிரிக்கெட் விளையாடும் முக்கியமான அணிகளில் ஒன்றான நியூஸிலாந்து, இதுவரை உலகக்கிண்ணத்தை வெல்லாவிட்டாலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

நியூஸிலாந்தில் உள்ள முக்கியமான கிரிக்கெட் மைதானங்களில் ஒன்று ஒக்லாந்து ஈடன் பார்க். 1930 ஆம் ஆண்டில் இருந்து இந்த மைதானத்தில் கிரிக்கெட் விளையாடப்படுகிறது. நியூஸிலாந்தில் அதிக மக்கள் தொகை கொண்ட ஒக்லாந்தில் அமையப்பட்டுள்ள இந்த மைதானத்தில் 41 ஆயிரம் ரசிகர்கள் நேரில், போட்டியை கண்டு ரசிக்கலாம்.

தற்போதைய நிலையில் டெஸ்ட் போட்டிகளுக்கு இவ்வளவு ரசிகர்களை மைதானத்துக்கு வருவது அரிதாக உள்ளது. இதனால் நியூஸிலாந்து அணி அதிக செலவைச் சந்திக்க வேண்டியுள்ளது. பாதுகாப்பு, மைதானம் பராமரிப்பு ஆகியவற்றுக்குச் செலவழிக்கும் பணத்தை திரும்ப எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நிதிச்சுமை காரணமாக மிகப்பெரிய மைதானமாக ஒக்லாந்து ஈடன் பார்க் மைதானத்தை வெஸ்டர்ன் ஸ்பிரிங்ஸ் ஸ்டேடியத்துக்கு மாற்ற நியூஸிலாந்து முடிவு செய்துள்ளது. ஈடன் பார்க்கில் 2006 இல் இருந்து மூன்று டெஸ்ட் போட்டிகள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 24.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.